தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள் சென்னை–6

ந.க.எண்.25154 / அ1 / இ2 / 2021 நாள்.21.01.2022

பொருள்: பள்ளிக் கல்வி – 2021–22ம் ஆண்டு ஆசிரியர்கள் பொதுமாறுதல் சார்பான விண்ணப்பங்கள் இணையத்தில் பதிவேற்றம் செய்தமை – முன்னுரிமைப் பட்டியல் வெளியிட்டமை – திருத்தங்கள் மேற்கொள்ள அறிவுரைகள் வழங்குதல் சார்பு.

பார்வை: 1)அரசாணை (நிலை)எண்.176 பள்ளிக் கல்வி (பக5(1) துறை நாள்.17.12.2021

2)பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள் இதே எண்ணிட்ட நாள்.30.12.2021, 06.1.2022, 07.1.2022 08.1.2022,10.1.2022, .1.2022 மற்றும் 20.1.2022

–0–

பார்வை–1ல் காணும் அரசாணையின்படி 2021–22ம் கல்வியாண்டிற்கு அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் அனைத்துவகை ஆசிரியர்களுக்கான பொது மாறுதல் கலந்தாய்வு நெறிமுறைகள் சார்பாக ஆணை வெளியிடப்பட்டு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காண் அரசாணையின் வழிகாட்டுதலின் அடிப்படையில் மாறுதல் கோரும் ஆசிரியர்கள் உரிய விண்ணபத்தில் பூர்த்தி செய்து கல்வி தகவல் மேலாண்மை இணையத்தில் (EMIS Online) பதிவேற்றம் செய்துள்ளனர். அதனடிப்படையில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள மாறுதல் விண்ணப்பங்களை பதவி வாரியாக, பாடவாரியாக முன்னுரிமைப் பட்டியல் 20.1.2022 அன்று (Seniority List) EMIS இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் வெளியிடப்பட்டுள்ள முன்னுரிமைப் பட்டியலில் பல்வேறு ஆசிரியர்களின் (மாறுதலுக்கு விண்ணப்பித்தவர்கள்) விவரங்கள் தவறுதலாக பதிவேற்றம் செய்யப்பட்டு அதனை சம்மந்தப்பட்ட பள்ளியின் தலைமை ஆசிரியர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது அறியவருகிறது. இவற்றினை சரி செய்ய ஏதுவாக கீழ்க்கண்ட அறிவுரைகளை பின்பற்றி EMIS இணையத்திலேயே School Login IDஐ உள்ளீடு செய்து Teacher Profile–ல் ஆசிரியர்களின் பதவியின் பெயர், பாடம், அப்பள்ளியில் பணியில் சேர்ந்த தேதி போன்ற விவரங்களில் உரிய திருத்தங்களை மேற்கொள்ள அனைத்து தலைமை ஆசிரியர்களுக்கும் வழங்க மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

## திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டியவை

1) மாறுதலுக்கு விண்ணப்பித்த ஆசிரியர்களின் (Teacher Profile ல்) உள்ள விவரங்கள் சரியாக உள்ளனவா என்பதை உறுதி செய்யாமல் தலைமை ஆசிரியரால் ஒப்புதல் அளிக்கப்பட்டமையால் பல்வேறு தவறுகள் உள்ளது கண்டறியப்பட்டுள்ளது. அதனை உடனடியாக சரிசெய்திட தலைமை ஆசிரியருக்கு அறிவுறுத்தப்படவேண்டும்.

2) அரசாணை (நிலை) எண்.113 மனிதவள மேல்ண்மை (கே)துறை நாள்.13.10.2021ன்படி ஜாக்டோ–ஜியோ போராட்டத்தில் கலந்து கொண்டு அனைத்து ஒழுங்கு நடவடிக்கைகளும் கைவிடப்பட்டு ஆணை வழங்கப்பட்டுள்ளமையால் அவர்களை பேராட்டத்தில் ஈடுபட்டமைக்காக நிருவாக மாறுதல் செய்து வேறு பள்ளிக்கு மாற்றப்பட்டிருப்பினும் போராட்ட காலத்தில் அவர் எந்த பள்ளியில் பணிபுரிந்து வந்தாரோ அப்பள்ளியில் பணியில் சேர்ந்த நாளினை (தற்போது பணிபுரியும் பள்ளியில் சேர்ந்த நாள் என்ற கலத்தில்) குறிப்பிடவேண்டும்.

3) முதுகலை ஆசிரியர்களை பொறுத்தவரையில் கணினி அறிவியல் (PG– Teacher– Computer Science) என ஒரு சில ஆசிரியர்களால் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது அறிய வருகிறது. இதனை School Login IDஐ உள்ளீடு செய்து Teacher Profile–ல் இப்பதவியினை Computer Instructor Gr.I (அ) Computer Instructor II என்பதை சரிபார்த்து திருத்தம் மேற்கொள்ளப்படவேண்டும்.

4) Computer Instructor Gr.II பதவியினை 12.02.2019 பிறகு தான் Computer Instructor Gr.I நிலை உயர்த்தி ஆணை வழங்கப்பட்டுள்ளது. எனவே Computer Instructor Gr.Iக்கான பதவியில் உள்ள ஆசிரியர்கள் பொது மாறுதலுக்கு விண்ணபிக்கும் போது மேற்படி தேதியான 12.2.2019 பிறகே Computer Instructor Gr.I என பதிவேற்றம் செய்யப்படவேண்டும். Computer Instructor Gr.I ல் உள்ள ஆசிரியர்கள் எவரேனும் Computer Instructor Gr.II பதவியில் பணியில் சேர்ந்த நாளினை மாறுதல் விண்ணப்பத்தில் குறிப்பிட்டிருந்தால் அந்த தேதியினை 12.2.2019 பிறகே மாற்றம் செய்யப்படவேண்டும்.

5) முதுகலை பாட ஆசிரியர் தாவரவியல், விலங்கியல் மற்றும் உயிரியியல் ஆகிய பாடங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு (மாறுதல் கோரி விண்ணப்பித்தவர்கள்) ஒருங்கிணைந்த முன்னுரிமைப் பட்டியல் (Combined Seniority List) தயார் செய்து வெளியிடப்படும். இவற்றில் உயிரியல் பணியிடத்தில் பணிபுரியும் ஆசிரியர் தாவரவியல்

பாட ஆசிரியராக இருப்பின் தாவரவியல் மற்றும் உயிரியியல் பணியிடத்திற்கும் விலங்கியல் பாட ஆசிரியராக இருப்பின் விலங்கியல் மற்றும் உயிரியியல் பணியிடத்திற்கும் மாறுதல் பெற்றுக்கொள்ளலாம்.

6) முதுகலை வணிகவியல் ஆசிரியர்கள் PG Teacher Accountancy என பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அவ்வாசிரியர்களின் School Login IDஐ உள்ளீடு செய்து Teacher Profile-ல் Appointed for subject என்ற கலத்தில் Accountancy என்று குறிப்பிட்டுள்ளதை Commerce என திருத்தம் மேற்கொள்ளப்படவேண்டும்.

7)மாறுதலுக்கு விண்ணப்பித்துள்ள அனைத்து வகை ஆசிரியர்கள் பணிபுரிந்து வரும் பள்ளியின் வகை (Management) அதாவது Boys - Girls - Co Ed தவறுதலாக குறிப்பிடப்பட்டிருப்பின் CEO Login ID ஐ உள்ளீடு செய்து திருத்தம் மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது. மேலும் முன்னுரிமையில் (Seniority List) ஆசிரியர்கள் தெரிவிக்கும் முறையீடுகள், திருத்தங்கள் ஆகியவற்றினை முதன்மைக் கல்வி அலுவலர் நிலையிலேயே உரிய இணையத்தில் சரிசெய்யப்படவேண்டும்.

ஆசிரியர்கள் பொதுமாறுதல் சார்பான தற்காலிகமாக வெளியிடப்பட்டுள்ள பட்டியலில் திருத்தங்கள் மேற்கொள்ள 21.1.2022 அன்று வரை மட்டுமே காலஅவகாசம் வழங்கப்பட்டது. தற்போது மேற்கண்டவாறு அறிவுரைகளைப் பின்பற்றி இதர திருத்தங்கள் இருப்பின் அவற்றினை 22.01.2022 மாலை 5.00மணிக்குள் திருத்தங்கள் மேற்கொள்ள காலஅவகாசம் வழங்கப்பட்டுள்ளதால் எவ்வித தவறுதலும் இன்றி செயல்படுமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

ஆணையருக்காக

21/1/22

பெறுநர்

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்

(மின்னஞ்சல் மூலமாக)

நகல்: இணை இயக்குநர் (மேல்நிலைக் கல்வி)& (பணியாளர் தொகுதி)

நகல்: EMIS ஒருங்கிணைப்பாளர், மாநில திட்ட இயக்ககம் சென்னை-6